அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 8

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 100**<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்: 15** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3 4

1. தமிழிசையின் தொன்மைக்குச் சான்றாக விளங்கும் இலக்கியம்
   1. மணிமேகலை
   2. வளையாபதி
   3. சிலப்பதிகாரம்
   4. குண்டலகேசி

2. கயல்விழி வில் போன்ற புருவம் உடையவள். இதில் வந்துள்ள உவமேயம்
   1. வில்
   2. போன்ற
   3. வளைவு
   4. புருவம்

3. 75ஆவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
   1. வெள்ளிவிழா
   2. பவளவிழா
   3. வைரவிழா
   4. பொன்விழா

4. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
   1. மூதுரை
   2. திருக்குறள்
   3. நல்வழி
   4. ஆத்திசூடி

5. இனியா சுண்டல் உண்டாள். இதில் சுண்டல் என்பது
   1. பொருளாகுபெயர்
   2. சினையாகுபெயர்
   3. தொழிலாகுபெயர்
   4. காலவாகுபெயர்

6. ஒருவர் தான் கற்றுத்தேர்ந்த கலையைப் பலர்முன் முதன்முதலாக மேடையேற்றுவது
   1. அரங்கேற்றம்
   2. ஒத்திகை
   3. பட்டிமன்றம்
   4. வெள்ளோட்டம்

7. ஊர்மக்களிடையே இறப்புச் செய்தியை அறிவிக்கப் பயன்படும் இசைக்கருவி
   1. தாளம்
   2. பறை
   3. முரசு
   4. சேமக்கலம்

8. தாயக மக்கள் போரினால் பாதிக்கப்பட்டனர். இதில் வந்துள்ள வேற்றுமை
   1. மூன்றாம் வேற்றுமை
   2. இரண்டாம் வேற்றுமை
   3. ஐந்தாம் வேற்றுமை
   4. நான்காம் வேற்றுமை

1 2 3 4

9. புலவர் இயற்கையின் அழகை இன்புற்ற வண்ணம் நடக்கிறார். இதில் அழகு என்பது
   1. உவகை
   2. எழில்
   3. அன்பு
   4. துன்பம்

10. கயிலாயவன்னியனுக்கு அஞ்சி பைல், பெங்சூற்றர் கோட்டையைக் கட்டியவர்கள்
   1. ஒல்லாந்தர்
   2. பிரித்தானியர்
   3. போர்த்துக்கேயர்
   4. ஐரோப்பியர்

11. இந்தியா, ஈழம் ஆகிய நாடுகளில் வாழ்ந்த தொல்குடியினர்
   1. உரோமர்
   2. தமிழர்
   3. சீனர்
   4. ஆரியர்

12. நாம் நாள்தோறும் பழங்கள் உண்ண வேண்டும். இதில் வந்துள்ள இடைச்சொல்
   1. உம்
   2. அள்
   3. ஓ
   4. தோறும்

13. தோழனுக்குத் தோழி போல சிறுவனுக்கு
   1. தங்கை
   2. சிறுமி
   3. மாமி
   4. மாணவி

14. சாத்தனாரால் எழுதப்பட்ட காப்பியம்
   1. சீவகசிந்தாமணி
   2. சிலப்பதிகாரம்
   3. குண்டலகேசி
   4. மணிமேகலை

15. கயிலாயவன்னியனின் அரசு அமைந்திருந்த இடம்
   1. கொட்டியாரம்
   2. கற்சிலைமடு
   3. பனங்காமம்பற்று
   4. உடையாவூர்

16. பால் + குடம் என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. பால்குடம்
   2. பாற்குடம்
   3. பாற்கூடம்
   4. பால்ற்குடம்

1 2 3 4

17. தங்கை கலகல எனச் சிரித்தாள். இதில் கலகல என்பது
    1. அடுக்குத்தொடர்
    2. இணைமொழி
    3. அடுக்கிடுக்குத்தொடர்
    4. இரட்டைக்கிளவி

18. எகிப்தில் உள்ள நைல் ஆற்றின் அணை தமிழரால்
    1. கட்டப்படுகிறது
    2. கட்டப்பட்டது
    3. கட்டப்படும்
    4. கட்டினார்கள்

19. தமிழர் பெருமளவில் வாழும் நாடு
    1. மலேசியா
    2. சிங்கப்பூர்
    3. இந்தியா
    4. ஈழம்

20. கொக்குகள் உறுமீன் வரும்வரை குளக்கரையில் காத்திருக்கும். இதில் உறு என்பது
    1. இடைநிலை
    2. வேற்றுமையுருபு
    3. உவமையுருபு
    4. உரிச்சொல்

21. களப்பிரர் என்ற வேற்றினத்தினர் தமிழ் நிலங்களை ஆண்ட காலம்
    1. சங்கமருவியகாலம்
    2. சங்ககாலம்
    3. பல்லவர்காலம்
    4. சோழர்காலம்

22. எதிர்கால இடைநிலைகள்
    1. கின்று, கிறு
    2. த், ட், ற், இன்
    3. ப், வ்
    4. த், ப், வ்

23. துன்பம் என்பதன் எதிர்ப்பொருட் சொல்
    1. வறுமை
    2. இன்பம்
    3. அழுகை
    4. இடர்

24. பாடினாள் என்பதன் வினையடி
    1. பாடிய
    2. பாடு
    3. பாடி
    4. பாடும்

1 2 3 4

25. மகாகவி து. உருத்திரமூர்த்தி பிறந்த ஊர்
    1. கிளிநொச்சி
    2. மன்னார்
    3. அளவெட்டி
    4. வவுனியா

26. நாய் குரைக்கும் அதுபோல புலி
    1. கத்தும்
    2. உறுமும்
    3. கனைக்கும்
    4. பிளிறும்

27. நான் நேற்று பள்ளிக்குச் சென்றேன். இதில் நான் என்பது
    1. தன்மைப் பன்மை
    2. முன்னிலை ஒருமை
    3. தன்மை ஒருமை
    4. படர்க்கை ஒருமை

28. பனி படர்ந்த வரைகள் அழகாகக் காட்சியளித்தன. இதில் வரைகள் என்பது
    1. கடல்கள்
    2. மலைகள்
    3. ஆறுகள்
    4. வயல்கள்

29. முழவுகள் என அழைக்கப்படும் இசைக்கருவிகள்
    1. துளைக்கருவிகள்
    2. நரம்புக்கருவிகள்
    3. தோற்கருவிகள்
    4. வெண்கலக்கருவிகள்

30. ஓர் இனத்தின் அடையாளமாக விளங்குவது
    1. மொழி
    2. மானம்
    3. வீரம்
    4. புகழ்

(30 x 1 = 30 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் உயர்கல்விக்காகச் சென்ற நாடுகள் எவை?

____________________________________________

2. மகாகவி உருத்திரமூர்த்தி எழுதிய இலக்கிய வடிவங்கள் இரண்டு எழுதுக.

____________________________________________

____________________________________________

3. கீழ்க்கணக்கு என்பதன் பொருள் என்ன?

____________________________________________

____________________________________________

4. இன்கலைகள் எவற்றுக்குத் துணை செய்கின்றன?

____________________________________________

____________________________________________

5. ஆசிரியர் மாணவனுக்குப் பரிசு கொடுத்தார். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு, பொருள் என்பவற்றை எழுதுக.

வேற்றுமை உருபு: ____________________ பொருள்:____________________

6. இனியாவின் குரல் தேன் போன்று இனிமையானது. இதில் வந்துள்ள உவமானம், உவமேயம் எனபவற்றை எழுதுக.

உவமானம்: ____________________ உவமேயம்:____________________

7. ஈழத்தின் முதல் தலைநகரம் அநுராதபுரம்.
அநுராதபுரத்தைத் தமிழ், சிங்கள மன்னர்கள் மாறிமாறி ஆட்சிசெய்தனர்.

தனிச்சொல்லியங்களைத் தொடர்ச்சொல்லியமாக எழுதுக.

____________________________________________

____________________________________________

(5X2=10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. அறநூல்:

2. கடற்படை:

3. புயல்:

4. பரிசு:

5. வணிகம்:

(5X2=10 புள்ளிகள்)

**4. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழர்க் கென்று இருக்கின்ற
தனித்துவம் ஆன பண்பாட்டைத்

தமிழர் நாங்கள் காத்திடுவோம்!
தரணியில் அதனைப் போற்றிடுவோம்!

பெற்று வளர்த்த பெற்றோரைப்
பேணிக் காப்பது எம்கடமை

கற்க உதவிய ஆசானைக்
கௌரவம் செய்வது எங்கடமை!

இல்லம் நாடும் விருந்தினரை
இன்முகம் காட்டி வரவேற்போம்!

இல்லை என்று வருவோர்க்கு
ஈந்து மகிழப் பழகிடுவோம்!

- கவிஞர் சபா. அருள் சுப்பிரமணியம்

1. தமிழர்கள் எதைக் காக்க வேண்டும்?

______________________________

2. நாங்கள் யாரைப் பேணிக் காக்க வேண்டும்?

______________________________

3. விருந்தினரை நாம் எவ்வாறு வரவேற்க வேண்டும்?

______________________________

4. எமக்குக் கல்வி கற்க உதவி செய்பவர் யார்?

______________________________

5. இல்லை என்று வருவோருடன் நாம் எப்படிப் பழகிடுவோம்?

______________________________

(5X2=10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

1. எல்லாளன் ஒரு சிறந்த தமிழ் மன்னன்.
2. உலகில் நீரின் அளவு குறைந்து வருகிறது.
3. எமது உறவினர் தாயகத்தில் வாழ்கிறார்கள்.
4. ஈழத்தில் அழகு நிறைந்த பல இடங்கள் உள்ளன.
5. நாங்கள் எமது தாய்மொழியை விருப்பத்துடன் கற்க வேண்டும்.

**வாழிடமொழி:**

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

(5×2=10 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. வையகத் தமிழர்
2. மகாகவி து. உருத்திரமூர்த்தி
3. கல்விச் சுற்றுலா

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - சுற்றுலாவுக்கு அணியம் செய்தல்
   - சுற்றுலாவின் போது பார்வையிட்ட இடங்கள்
   - சுற்றுலாவினால் கிடைக்கும் பயன்கள்

4. சூழல் மாசடைதல்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - சூழல் மாசடைவதற்கான கரணியங்கள்
   - சூழல் மாசடைவதால் ஏற்படும் விளைவுகள்
   - சூழல் மாசடைவதைத் தடுக்கும் வழிகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளுக்கு அடிப்படையாக அமைந்திருப்பது கட்டடக் கலையாகும். இக்கலை தொழில்நுட்பம், அழகு, கற்பனை ஆகிய மூன்றும் இணைந்து உருவாகுகிறது. கட்டடக்கலை தொடக்க காலத்தில் சிறுகுடிசை கட்டியதிலிருந்து கோவில்கள் கட்டப்பட்ட காலம் வரையிலும் பல்வேறு வகையான வளர்ச்சியை அடைந்துள்ளது. தமிழர் தமது குமுகாய, சமயச் சூழல்களையும் வாழ்க்கை முறைகளையும் நோக்கங்களையும் வெளிப்படுத்துவதற்கு ஓயாமல் உழைத்து வந்திருக்கின்றனர். இவற்றின் வாயிலாகத் தமது பண்பாட்டுக் கூறுகளையும் புலப்படுத்தியுள்ளனர். சோழப் பேரரசின் ஆட்சியில் முதலாம் இராசராசன் மிகச் சிறந்த ஒரு மன்னன் ஆவான். அவனால் தஞ்சைப் பெருவுடையார் கோவில் கட்டுவிக்கப்பட்டது. கோவிலின் உச்சியில் பொருத்தப்பட்டுள்ள கலசத்தின் நிழல் கீழே தரையில் வீழ்வதே இல்லை. கதிரவன் ஒளி எத்திசையில் சென்றாலும் கலசத்தின் நிழல் தரையில் விழாதவாறு அமைந்திருப்பது, கட்டடக் கலையில் தமிழர் அடைந்துள்ள உயர்ந்த நிலையை வெளிப்படுத்துகிறது.

1. கட்டடக்கலை எக் கலைகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது?

_______________________________________________

_______________________________________________

2. தஞ்சைப் பெருவுடையார் கோவில் யாரால் கட்டுவிக்கப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

3. தொழில்நுட்பம், அழகு, கற்பனை ஆகிய மூன்றும் இணைந்து உருவாகும் கலை எது?

_______________________________________________

_______________________________________________

4. கட்டடக்கலை எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது?

_______________________________________________

_______________________________________________

5. தஞ்சைப் பெருவுடையார் கோவில் கலசத்தின் சிறப்பு யாது?

_______________________________________________

_______________________________________________

(5×2=10 புள்ளிகள்)

**1. மாறியிருக்கும் சொல்லியங்களை ஒழுங்குபடுத்தி, பந்தி அமைப்புக்குப் பொருத்தமான எண்களைக் கட்டத்தினுள் எழுதுக.**

1. உழவர் வாத்தின் வயிற்றில் பொன் முட்டைகள் நிறைய இருக்கும் என்ற பேராசையில், அதன் வயிற்றை வெட்டினார்.

2. ஒவ்வொரு நாளும் ஒரு பொன் முட்டைக்காக காத்திருக்க வேண்டும் என அவர் எண்ணினார்.

3. ஓர் ஊரில் பேராசை பிடித்த உழவர் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

4. உழவர் பேராசை பெரும் நட்டம் கொடுக்கும் என்பதை உணர்ந்தார்.

5. அவர் வளர்த்த வாத்துகளுள் ஒன்று ஒவ்வொரு நாளும் ஒரு பொன் முட்டை இட்டு வந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |